செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அங்கே இருக்கின்ற தனித் தன்மையைக் கருதி தனியாக ஆம்புலன்ஸ் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி துறை அதிகாரிகளோடு பேசி, முடியும் என்றால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திருமதி இலதா பிரியகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

65—

செய்யூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

26712–திருமதி இலதா பிரியகுமார் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செய்யூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திருமதி இலதா பிரியகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். செய்யூர் கிராமம் பெரிய பஞ்சாயத்திலுள்ள கிராமம். அங்கே 5 கிராமங்கள் உள்ளன. அவை அவிநாஸ், கண்டிகை, கணிகாபுரம், செய்யூர் காலனி, செய்யூர் கிராமம். அரக்கோணத்திலிருந்து 10 கி.மீ. தூரத்தில் இருந்தாலும் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது மாதிரி பல நன்மைகள் அவர்களுக்கு வந்து சேருவதில்லை. பஸ் வசதியில்லை. ரோடுகள் வசதியும் இல்லை. அரக்கோணம் செல்வதற்கு சரியான முறையில் வசதிகள் இல்லாத காரணத்தினால், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை 69 ஆயிரம் பேர் அந்த ஒன்றியத்திலே வருகிறது. ஏற்கெனவே இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அங்கே இருக்கின்றன. 30 ஆயிரம் பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது அரசினுடைய அளவுகோலாக வைத்து அதைச் செய்துகொண்டிருக்கிறோம். எனவே, அந்த வகையிலே பார்க்கும்போது, ஏற்கெனவே இரண்டு பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் இருக்கின்ற காரணத்தால் புதியதாகக் கொடுப்பது சிரமமாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கும்போது ஏறத்தாழ, நீங்கள் கேட்கின்ற ஊரிலிருந்து 10-வது கி.மீட்டரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், 15-வது கி.மீட்டரிலே மற்றொரு ஆரம்ப சுகாதார நிலையமும் இருக்கின்றன. எனவேதான் இதைக் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று தெரிவித்திருக்கிறோம். அதோடு மக்கள் தொகை அடிப்படையிலேதான் செய்துகொண்டு வருகிறோம். இங்கே ஏறத்தாழ 35 ஆயிரம் பேருக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற வகையிலே இருக்கிறது.*

திருமதி இலதா பிரியகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமர்ஜென்சி சர்வீஸாக பஸ் வசதி இல்லாத காரணத்தினால் 10 கி.மீட்டர் இருந்தாலும் போவதற்குக் கஷ்டமாக இருப்பதால் இதை மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு மருத்துவமனையை உருவாக்கி கட்டுவதைவிட பஸ் விடுவது சுலபம் என்று கருதுகிறேன். (சிரிப்பு) எனவே, அந்தவகையிலே அந்தக் கேள்வியை, அந்தப் பக்கமாகப் போட்டால் அது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 66, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.*

66—

தொட்டியம் தொகுதியில் சாயத் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

****23535–திரு. என்.ஆர். சிவபதி :***

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—